**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**

**CC No.202/2013**

| | | |
|---|---|---|
| 1. **குற்றமுறையீட்டாளர்** | : | அரசுக்காக: காவல் ஆய்வாளர்,<br>நாகுடி காவல் நிலையம்,<br>நாகுடி.<br>குற்ற எண்.88/2013. |
| 2. **குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர் மற்றும் விலாசம்** | : | A1. பிரேமா<br>க/பெ. குப்புச்சாமி.<br><br>A2. லெட்சுமி,<br>க/பெ.ரெங்கசாமி.<br><br>A3. காந்திமதி,<br>க/பெ.கருப்பையா<br><br>A4 செல்வி,<br>க/பெ.சாத்தையா.<br><br>A5 வீரம்மாள், (இறப்பு)<br>க/பெ.வெள்ளைச்சாமி.<br><br>A6 ராமசாமி,<br>த/பெ.சாத்தையா.<br><br>A7 கருப்பையா, (இறப்பு)<br>த/பெ.சாத்தையா.<br><br>A8 வெள்ளைச்சாமி,<br>த/பெ.ராமசாமி. (இவ்வழக்கில் இருந்து CC 82/2023 ஆக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்)<br><br>A9 வெள்ளைச்சாமி,<br>த/பெ.முத்தையா.<br><br>**எதிரிகளின் முகவரி:**<br>வல்லம்பக்காடு,<br>அறந்தாங்கி தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 3. **குற்றம் நடந்த நாள்** | : | 21.07.2013 |

| | | |
|---|---|---|
| 4. | **புகார் அளிக்கப்பட்ட நாள்** | : 21.07.2013 |
| 5. | **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்** | : 21.07.2013 |
| 6. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட நாள்** | 21.07.2013 |
| 7. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணையில் வந்த நாள்** | 12.08.2013 |
| 8. | **குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்** | 26.07.2013 |
| 9. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு** | A1 to A5– இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC<br>A6 & A9–இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC<br>A7 & A8–இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC |
| 10. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பதில்** | : குற்றவாளிகள் இல்லை |
| 11. | **வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட நாள் மற்றும் முடிக்கப்பட்ட நாள்** | : 06.03.2014–02.03.2026 |

| | **முதல் விசாரணை** | **குறுக்கு விசாரணை** |
|---|---|---|
| PW1 | – 06.03.2014 | 18.08.2025 |
| PW2 | – 06.03.2014 | 21.01.2026 |
| PW3 | – 17.06.2015 | 23.02.2026 |
| PW4 | – 17.06.2015 | 02.03.2026 |
| PW5 | – 17.06.2015 | 18.08.2025 |
| PW6 | – 17.06.2015 | 17.06.2015 |
| PW7 | – 17.06.2015 | 17.06.2015 |
| PW8 | – 20.10.2022 | 20.10.2022 |

12. **நீதிமன்றத்தின் முடிவு** : 1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC–ன் கீழும், 6 மற்றும் 9 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC–ன் கீழும், 7 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின்

அடிப்படையில் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 5 மற்றும் 7–ம் எதிரி இவ்வழக்கின் புலன் விசாரணை நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்ட படியால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இவ்வழக்கின் 8–ம் எதிரிக்கு எதிராக வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டு CC 82/2023 என்று நிலுவையில் உள்ளது.

**13. வழக்கு சொத்து** : வழக்கு சொத்து ஏதும் இல்லை.

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இராஜேந்திரன், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்....

**<u>தீர்ப்புரை</u>**

அரசு தரப்பில் 1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC–ன் கீழும், 6 மற்றும் 9 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC–ன் கீழும், 7 மற்றும் 8 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC–ன் கீழும் குற்றஞ்சாட்டப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***இனிமுதற்கொண்டு இந்திய தண்டனைச்சட்டம் என்பது இ.த.ச. என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் என்பது கு.வி.மு.ச. என்றும் அழைக்கப்படும்.***

**<u>1) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம்:</u>**

1.1) கடந்த 21.07.2013–ம் தேதி நாகுடி, வல்லம்பக்காட்டில் சாட்சி 1 வள்ளி சாட்சி 2 ஜானகி வீட்டில் இருக்கும்போது, இவ்வழக்கின் 1 முதல் 9 எதிரிகள் அனைவரும் கலகம் செய்யும் நோக்கத்தோடு வந்து அத்துமீறி வீட்டு காம்பவுண்ட் சுவற்றுக்குள் நுழைந்து 1 முதல் 5 எதிரிகள் சாட்சி 1 மற்றும் 2–ன் ஜாக்கெட்டைப் பிடித்து கிழித்து உயிரோடு விடக்கூடாது என மிரட்டியும், 7 வது எதிரியும் 8 வது எதிரியும் சாட்சி 1, 2 ஐ அரிவாளால் வலது முன்கையில் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தியும், உயிரோடுவிடக்கூடாது என கொலைமிரட்டல் செய்தும், 9 வது எதிரி சாட்சி 2–ன் ஜாக்கெட்டை பிடித்து கிழித்து மானபங்கம் செய்தும், உயிரோடு விடக்கூடாது என மிரட்டியுள்ளனர். எனவே, 1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC–ன் கீழும், 6 மற்றும் 9 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC–ன் கீழும், 7 மற்றும் 8 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC–ன் கீழும் தண்டிக்கதக்க குற்றம் என நாகுடி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2) வழக்கினை கோப்பிற்கு எடுத்தல், அழைப்பாணை, நகல் வழங்குதல் :</u>**

இந்நீதிமன்றத்தால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை மற்றும் வாக்குமூலங்கள், ஆவணங்கள் போன்றவைகளை கவனமாக பரிசீலனை செய்ததில், எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு உள்ளதென இந்நீதிமன்றம் கருதியதால், வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு **கு.வி.மு.ச. பிரிவு 204** இன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

அழைப்பாணையின் பேரில் எதிரிகள் ஆஜரானதும், **கு.வி.மு.ச. பிரிவு 207** இன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டது.

**<u>3) குற்றச்சாட்டு வனைதல் மற்றும் எதிரிகளின் பதில் :</u>**

பின்பு எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் 1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC–ன் கீழும், 6 மற்றும் 9 வது எதிரியின் மீது

இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC−ன் கீழும், 7 மற்றும் 8 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC−ன் கீழும் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் உள்ளதென கருதியதால், எதிரிகள் மீது **கு.வி.மு.ச. பிரிவு 240(1)** இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது. 5 மற்றும் 7−ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 8−ம் எதிரி இவ்வழக்கில் இருந்து CC 82/2023 ஆக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார். மேற்படி குற்றச்சாட்டு குறித்து **கு.வி.மு.ச. பிரிவு 240(2)** இன் கீழ் எதிரிகளிடம் தமிழில் விளக்கி கூறி வினவிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்று மறுத்துரைத்து வழக்கு விசாரணைக்கு வேண்டுரைத்தனர். எனவே இந்நீதிமன்றமானது **கு.வி.மு.ச. பிரிவு 242(1)** இன் கீழ் அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிட்டது.

**<u>4) அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>**

**4.1) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சியங்களும், **அ.சா.ஆ.1 முதல் 5** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4.2)** அரசு தரப்பில் **அ.சா.1** ஆக நாகராஜ் என்பவர் விசாரிக்கப்பட்டும், **அ.சா.2** ஆக ரவி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.3** ஆக வள்ளி என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் புகாரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.4** ஆக ஜானகி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.5** ஆக சாத்தையா என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.6** ஆக லெட்சுமணன் என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.7** ஆக கல்யாணி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.8** ஆக மாணிக்கம் என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகவும், பார்வைமகஜரானது **அ.சா.ஆ.3** ஆகவும், மாதிரி வரைபமானது **அ.சா.ஆ.4** ஆகவும், அ.சா.3−ன் விபத்து பதிவேடு **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்பட்டும், அ.சா.4−ன் விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்பட்டும், அ.சா.3−ன் காயச்சான்றானது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்பட்டும், அ.சா.4−ன் காயச்சான்றானது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டும், சட்டப்பிரிவு

மாறுதல் அறிக்கையானது **அ.சா.ஆ.9** ஆகவும் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை. சான்று பொருட்கள் இல்லை.

**<u>5) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழான வினா மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியம்:</u>**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டவுடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)** இன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சி என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதிலுரைத்ததால், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6) அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களில் இருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

6.1) இவ்வழக்கின் அ.சா.3 நிகழ்நிலை புகார்தாரரும், மற்ற எதிரிகளும் வல்லம்பக்காடு கிராமத்தில் வசித்து வருவதாகவும், எதிரி வகையறாவிற்கும், அதே ஊரில் வசித்து வரும் அ.சா.3–ன் குடும்பத்திற்கும் நீண்ட நாட்களாக இட பிரச்சனை சம்பந்தமாக முன் பகை இருந்து வந்த நிலையில், 21.07.2013–ம் தேதி காலை 10 மணிக்கு நாகராஜ் தனது தோட்டத்தில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து, வீட்டிற்கு தண்ணீர் கொண்டு வர அவரது வீட்டின் காம்பவுண்ட் சுவரையொட்டி பைப் தோண்டி கொண்டிருந்த வேலையில், அப்போது சுமார் 12 மணி இருக்கும் என்றும், அந்த சமயத்தில் 9 எதிரிகளும் சேர்ந்து கையில் பயங்கரமான ஆயுதங்களுடன் வீட்டில் அத்துமீறி நுழைந்து, 1 முதல் 4 எதிரிகள் குடிப்போதையில், இந்த இடத்தில் பைப் போட்டது யார் என்று ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, 1வது எதிரி அ.சா.3 ஆன வள்ளியை தலை முடியை பிடித்து இழுத்தும், சட்டையை கிழித்தும், 4–ம் எதிரி கொலைமிரட்டல் விடுத்ததோடு, கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.3 ஐ வெட்டியதில், முன் கையில் வெட்டுகாயம் ஏற்பட்டதாகவும், அதனை தடுக்க வந்த அ.சா.4 ஜானகியை 2–வது எதிரி தள்ளிவிட்டு ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாகவும், அ.சா.4 ஐ வெட்டி வலது முன் கையில் இரத்த காயத்தை

ஏற்படுத்தியதாகவும், பின்பு அ.சா.4 ஐ மானபங்கம் செய்ததாகவும், அ.சா.4–ன் கழுத்தில் இருந்து 3 பவுன் தங்க செயினை அறுத்துக் கொண்டு, பின் 3–வது எதிரி தன் கையில் வைத்திருந்த விளக்கமாற்றால் மாறி மாறி அ.சா.3 மற்றும் அ.சா.4 ஐ அடித்ததாகவும், பின்பு சத்தம் போடவே அருகில் உள்ளவர்கள் வந்ததாகவும், எதிரிகள் அவர்களையும் கொலைமிரட்டல் விடுத்ததாகவும், பின்பு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று விபரங்களை காவல்துறையினரிடம் சொன்னதாகவும், மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக அ.சா.3–ன் குறியீடு செய்யப்பட்டும், அ.சா.1 ஆக இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரின் மகன் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.2 ஆக ரவி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.3 மற்றும் அ.சா.4 இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட மற்றும் காயம்பட்ட சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மேலும், பட்டியல் சாட்சியான காளியப்பன் இறந்துவிட்டதாக கூறி இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.5 ஆக சாத்தையா என்பவரும், அ.சா.6 ஆக லெட்சுமணன் மற்றும் அ.சா.7 ஆக கல்யாணி என்பவரும் விசாரணை செய்யப்பட்டு, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக அ.சா.8 விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆகவும், அ.சா.3 மற்றும் அ.சா.4–ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகவும், அ.சா.3 மற்றும் அ.சா.4–ன் காயச்சான்று அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணையில், அ.சா.3–ன் கழுத்தில் இருந்து 3 பவுன் தங்க செயினை எதிரிகள் அறுத்து சென்றுவிட்டதாக குறிப்பிட்டு இ.த.ச.பிரிவு 379–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணையில் தங்க செயின் காணாமல் போகவில்லை என்று முடிவு செய்து அ.சா.ஆ.9 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை இ.த.ச.பிரிவுகள் 147, 148, 324, 448, 506(ii) மற்றும் 379 of IPC–ல் இருந்து இ.த.ச.பிரிவுகள் 147, 148, 324, 448, 506(ii) of IPC ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>7) அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதம்:</u>**

7.1) அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் நிலை II அவர்கள் தனது வாதத்தில், இவ்வழக்கின் எதிரிகள் இடப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு அ.சா.3

மற்றும் அ.சா.4 ஐ எதிரிகளும், அவரது வகையராக்களும் அ.சா.1–ன் வீட்டிற்கு சென்று அருவாளை எடுத்து வெட்டி காயத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், அதற்கு ஆதரவாக மருத்துவ சான்றிதழ்கள் மற்றும் காயம்பட்ட சாட்சிகள் சாட்சியமளித்துள்ளனர் என்றும், அ.சா.3 மற்றும் அ.சா.4 ஐ அடித்து கையில் வைத்திருந்த கம்பு, அரிவாள் ஆகியவற்றினால் தாக்கி கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், அ.சா.3 மற்றும் அ.சா.4 ஐ பெண் என்றும் பாராமல் எதிரிகள் சட்டையை பிடித்து இழுத்து மானபங்கபடுத்தி கொலைமிரட்டல் விடுத்ததாகவும், அதற்கு ஆதரவாக அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும் மற்ற சாட்சிகள் அவர்களை ஒத்து சாட்சியமளித்துள்ளனர் என்றும், எதிரி நிகழ்நிலை புகார்தாரர் கொடுத்த புகாருக்கு வேண்டுமென்றே பொய்யாக வழக்கை கொடுத்துள்ளார் என்றும், எனவே, அரசு தரப்பு வழக்கு தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் மூலம் சரிவர நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

7.2) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், அரசு தரப்பு வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், உண்மையில் இவ்வழக்கின் எதிரிகள் தான் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் அ.சா.1, 2, 4 ஆகிய சாட்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளே எதிரிகளை தாக்கியுள்ளனர் என்றும், எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மற்றொரு வழக்கு உள்ளது என்றும், அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.3–ன் மகன் வழக்கு சம்பவத்தினை நேரடியாக பார்த்த சாட்சி அல்ல என்றும், அ.சா.2 வழக்கு சம்பவத்தின்போது இல்லாமல் இருந்ததாக குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், அ.சா.5 வழக்கு சம்பவத்தை பொறுத்து எனக்கு ஏதும் தெரியாது என்றும், அ.சா.6 மற்றும் அ.சா.7 சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறிவிட்டனர் என்றும், அரசு தரப்பில் முக்கியமாக சாட்சிகள் எதிரிகள் வகையராவிற்கும், நிகழ்நிலை புகார்தாரருக்கும் முன்பகை இருந்து வருவதை ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும், அ.சா.2 வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்தது போன்று தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துவிட்டு, எதிரிகள் தரப்பில்

செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில், வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் இருந்து 7 நாட்கள் கழித்து தான் ஊரில் இருந்து வந்தேன் என்றால், சரிதான். என்னை போலிஸ்சார் இந்த வழக்கு சம்பந்தமாக எப்போதாவது விசாரணை செய்தார்கள் என்றால், இல்லை என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.3–ம் எதிரிகள் குடும்பத்திற்கும், அ.சா.3–ன் குடும்பத்திற்கும் முன் விரோதம் உள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அ.சா.4–ன் சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வித ஆதரவும் இல்லை என்றும், அரசு தரப்பில் விளக்கமாற்றால் மற்றும் கம்பு, கட்டை போன்றவற்றால் எதிரிகள் அடித்ததாக கூறப்படும் சங்கதியை நிரூபணம் செய்யும் வகையில், வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரிகளே உண்மையான பாதிக்கப்பட்ட நபர்கள் என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

**8) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC–ன் கீழும், 6 மற்றும் 9 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC–ன் கீழும், 7 மற்றும் 8 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.**

**9) சாட்சியங்களின் பரிசீலனை மற்றும் பகுப்பாய்வு:**

9.1) இருதரப்பு வாதங்களும் வழக்கின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

9.2) இவ்வழக்கின் **1** முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC–ன் கீழும், 6 மற்றும் 9 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC–ன் கீழும், 7 மற்றும் 8 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC–ன் கீழும் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும்.

9.3) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணையில்,

> ***"நான் வல்லம்பக்காட்டில் குடியிருந்து விவசாய வேலைப்பார்த்து வருகிறேன். சுமார் 1 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நானும் எனது மருமகள் ஜானகியும் வீட்டில் இருந்தபோது, முன் விரோதம் காரணமாக முதலில் லெட்சுமி, பிரேமா ஆகிய எதிரிகள் இருவரும் எங்களோடு சண்டை அடித்தார்கள். தகராறு நடந்து கொண்டிருந்தபோது ராமசாமியும், அவரது மகன் வெள்ளைச்சாமி, கருப்பையா அவரது மனைவி காந்திமதி, காந்திமதி மருமகள் செல்வி வீரம்மாள், அவரது கணவர் மற்றொரு வெள்ளைச்சாமி வந்து ராமசாமி மகன் வெள்ளைச்சாமி என்பவர் தனது கையில் வைத்திருந்த அரிவாளால் எனது வலது கை முழங்கைக்கு கீழே அரிவாளால் வெட்டி இரத்தகாயத்தை ஏற்படுத்தினர் மற்ற எதிரிகள் தகராறு செய்து கொண்டு இருந்தார்கள்."***

என்று மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

அதேபோல், அ.சா. 4 அவருக்கு ஆதரவாக

> ***"<u>சுமார் 1 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 11 மணியளவில் நாங்கள் வீட்டில் இருந்தபோது, பைப் வெட்டி போட்ட முன் விரோதம் காரணமாக லெட்சுமி, பிரேமா ஆகியோர் வாய் தகராறு செய்து கொண்டு இருந்தார்கள்.</u> பிறகு இவ்வழக்கில் எதிரிகளான காந்திமதி, செல்வி, வீரம்மாள், ராமசாமி, கருப்பையா, 2 வெள்ளைச்சாமி ஆகியோர் ராமசாமி மகன் வெள்ளைச்சாமி என்பவர் தன் கையில் கொண்டு வந்த அரிவாளால் எனது வலது கை தோள்பட்டைக்கு கீழே அரிவாளால் வெட்டி இரத்த காயத்தை ஏற்படுத்தினர். மேலும் எனது மாமியாரையும் வலது கையில் வெட்டி இரத்த காயத்தை ஏற்படுத்தினர் மற்ற எதிரிகள் கம்பி***

***விலக்கமாறு அரிவாள் ஆகிய ஆயுதங்களை கொண்டு எங்களை அடித்தார்கள். சுமார் 6 பவுன் எடையிலான தங்க செயினை சம்பவத்தின் போது யாரோ ஒருவர் அறுத்துவிட்டார்கள்."***

என்று மேற்கண்வாறு சாட்சியமளித்துள்ளார்.

9.4) மேற்படி அ.சா.3, 4–ன் சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தின்போது அ.சா.2 உடனிருந்ததாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் அ.சா.2 **சுமார் 1 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சுமார் 2 மணியளவில், வழக்கின் எதிரிகள் வீட்டிற்கு வந்து தனது தாயாரையும், ஜானகியையும் கம்பால் அடித்தார்கள். நான் அவர்களை விளக்கிவிட்டேன்** என்று வழக்கு சம்பவத்தின்போது, இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள நாகராஜன் என்பவர் தனது முதல் விசாரணையில், வழக்கு சம்பவத்தை பொறுத்து கேள்விப்பட்ட சாட்சியாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 னது முதல் விசாரணையில், வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றும், அ.சா.6 மற்றும் அ.சா.7 சாட்சிகள் வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்று அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக மாறியுள்ளது தெளிவாக தெரிகிறது. அ.சா.8 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார்.

9.5) மேற்படி அ.சா.5 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, அவர் வழக்கு சம்பவம் பற்றி எதுவும் நேரடியாக தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும், அவர் ஆஜர் எதிரிகளுக்கும், நிகழ்நிலை புகார்தாரர் வகையராவிற்கும் உரிமையியல் வழக்கு நடைப்பெற்று வருவதுடன் வழக்கு சம்பவ நாளில் நிகழ்நிலை புகார்தாரரை எதிரியாக காட்டப்பட்டுள்ள மற்றொரு வழக்கு நடந்து வருவதை ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவர். அ.சா.3 அ.சா.1 மற்றும் 2–ன் தாயார் ஆவார். அ.சா.4 அ.சா.1–ன் மனைவி ஆவார். மேற்படி அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்த நெருங்கிய இரத்த உறவினர்கள் ஆவர்.

9.6) அ.சா.2 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, பாரா 2–ல், ***இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் இருந்து 7 நாட்கள்***

***கழித்து தான் ஊரில் இருந்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். என்னை போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக எப்போதாவது விசாரணை செய்தார்கள் என்றால், இல்லை*** என்று அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 மற்றும் அ.சா.4 ஐ எதிரிகள் தரப்பில் மனுவின் பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில், STC 475/17 என்ற Counter Case நிலுவையில் உள்ளதையும், சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளதையும் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளனர். அரசு தரப்பில் எதிரிகள் அ.சா.3 மற்றும் 4 ஐ வெட்டியதாக கூறப்படும் அரிவாள் மற்றும் கம்பு, கட்டை போன்ற வழக்கு சொத்துக்கள் எதும் கைப்பற்றப்படவில்லை. அரசு தரப்பில் அ.சா.4–ன் 6 பவுன் தங்க செயினை யாரோ பறித்து சென்றுவிட்டார்கள் என்று எடுத்துரைத்தார். ஆனால், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மேற்படி தங்க செயின் காணாமல் போனது குறித்து, பதிவு செய்யப்பட்ட இ.த.ச.பிரிவு 379–ன் கீழான குற்றத்தை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில் இருந்து உண்மையிலேயே செயின் காணாமல் போனதா இல்லையா என்று தெளிவுற இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை.

9.7) இவ்வழக்கின் 2 முதல் 4 வரையிலான சாட்சிகளை தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ சான்றிதழ்களின் அடிப்படையில், அ.சா.3 மற்றும் அ.சா.4 சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயத்தை விளைவித்த நபர் யார் என்று அரசு தரப்பில் தெளிவுற எடுத்துரைக்கப்படாததாலும், எனவே எதிரிகள் மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரிகள் சட்ட விரோதமாக கூடினரா என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவேண்டியது அவசியமாக உள்ளது. ஆனால் எதிரிகள் அனைவரும் ஒரே இடத்தில் பார்த்ததாக எவ்வித கண்ணுற்ற சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. மேலும் அ.சா.3 மற்றும் அ.சா.4–ன் பெண்மையை கலங்கப்படுத்தும் நோக்கில் செய்த செயல்கள் குறித்தும், அடித்தது குறித்தும், கொலைமிரட்டல் விடுத்தது குறித்தும், அரசு தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் கீழ் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு

செய்கிறது. மேலும், இவ்வழக்கின் 5 மற்றும் 7–ம் எதிரி இவ்வழக்கின் புலன் விசாரணை நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்ட படியால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இவ்வழக்கின் 8–ம் எதிரிக்கு எதிராக வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டு CC 82/2023 என்று நிலுவையில் உள்ளது.

**இறுதியாக,** 1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 448, 355 of IPC–ன் கீழும், 6 மற்றும் 9 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 354, 506(ii) of IPC–ன் கீழும், 7 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 148, 448, 324, 506(ii) of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 5 மற்றும் 7–ம் எதிரி இவ்வழக்கின் புலன் விசாரணை நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்ட படியால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இவ்வழக்கின் 8–ம் எதிரிக்கு எதிராக வழக்கு தனியாக பிரித்தெடுக்கப்பட்டு CC 82/2023 என்று நிலுவையில் உள்ளது.

அ) வழக்கு சொத்து ஏதும் இல்லை என்பதால் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்./எஸ்.சக்திநாராயணமூர்த்தி),**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

**அ.சா.1** : நாகராஜ்

**அ.சா.2** : ரவி

**அ.சா.3** : வள்ளி

**அ.சா.4** : ஜானகி

**அ.சா.5** : சாத்தையா

**அ.சா.6** : லெட்சுமணன்

**அ.சா.7** : கல்யாணி

**அ.சா.8** : மாணிக்கம்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

**அ.சா.ஆ.1** : புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

**அ.சா.ஆ.2** : முதல் தகவல் அறிக்கை

**அ.சா.ஆ.3** : பார்வை மகஜர்

**அ.சா.ஆ.4** : மாதிரி வரைபடம்

**அ.சா.ஆ.5** : அ.சா.3—ன் விபத்து பதிவேடு

**அ.சா.ஆ.6** : அ.சா.4—ன் விபத்து பதிவேடு

**அ.சா.ஆ.7** : அ.சா.3—ன் காயச்சான்று

**அ.சா.ஆ.8** : அ.சா.4—ன் காயச்சான்று

**அ.சா.ஆ.9** : சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**<u>சான்று பொருள் :</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை.

**பின்குறிப்பு :**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரி விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.11 04:55:29 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**